மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவைகுண்டம்
2026 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 13–ம் நாள் வெள்ளிக்கிழமை
அ.வ.எண். 72/24

வா.சா.2

சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டின் ஆணையுறுதி சட்டத்தின் வகைமுறைகளின் கீழ் (44 வது சட்டம்) திரு.எம்.ஹரிராமகிருஷ்ணன்,M.A.,M.Phil.,L.L.M., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

---

பெயர்: ஆனந்தகிதியோன் தேதி : 13.02.26
வயது : த/பெ : ஆபிரகாம் தனராஜ்
கிராமம் : தொழில் :
மாவட்டம்:

---

<u>13.02.26 குறுக்கு விசாரணை</u>

1.வழக்குரை விபரங்கள் தெரியும். தாவா சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் பால்ராஜ்க்கு பாத்தியப்பட்டது. சங்கரநாடார் என்ற ரத்திரனசாமிக்கு பாத்தியப்பட்டது என்று நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளது பொய்யா என்றால் அவர் பால்ராஜ்ன் அப்பா ஆவார். சங்கரநாடார் என்ற ரத்திரனசாமிக்கு மொத்தம் 4 குழந்தைகள். அதில் நான் சொன்ன பால்ராஜ் 2 வது மகன். பால்ராஜின் மனைவி ஜாயிஸ்பூமணி என்றால் சரிதான். சங்கரநாடார் என்ற ரத்திரனசாமிக்கு ஜாயிஸ்பூமணி நேரடி வாரிசு கிடையாது என்றால் சரியல்ல.

2.வழக்கு சொத்தின் மொத்த விஸ்தீரணம் 5.5 செண்ட் ஆகும். தபசில் சொத்து ஜாயிஸ்பூமணிக்கு மட்டும் பாத்தியப்பட்டது அல்ல என்றால் சரியல்ல. தபசில் சொத்தில் சங்கரநாடார் என்ற ரத்திரனசாமியின் மற்ற வாரிசுகளுக்கு உரிமை உள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் 7.75

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2026.02.13
19:55:21 +0530

செண்ட் என்றால் எனக்கு தெரியாது. 12.03.2009 ல் ஜாயிஸ்பூமணி வாதிக்கு ஏற்படுத்தி கொடுத்துள்ள நன்கொடைக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல. அந்த ஆவணத்தில் 5.5 செண்ட் என்று உள்ளதால் தான் தாவா சொத்தின் விஸ்தீரணம் 7.75 செண்ட் என்பதை மறுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3.வாதியும், நாங்களும் ஒரே வீட்டில் தான் வசித்து வருகிறோம் என்றால் சரிதான். எங்கள் வீடு கிழமேல் தெருவில் வடக்கு பார்த்து உள்ளது என்றால் சரியல்ல. தெற்கு பார்த்து உள்ளது. எங்கள் வீட்டின் வடக்கு பகுதியில் எந்த உரிமையும் கிடையாது என்றால் வடக்கில் ஆற்றங்கரை, ரோடு உள்ளது. தெற்கில் நாங்கள் அனுபவம் செய்யும் பாதைக்கு எங்களிடம் ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. நான் கூறும் 5.5 செண்ட் எங்கள் வீடு மட்டும் என்று சொன்னால் சரியல்ல. வீடும், அதனுடன் சேர்ந்த இடமும் ஆகும்.

4.நாங்கள் அனுபவம் செய்து வரும் பாதை எங்கள் சங்கரநாடார் என்ற ரத்திரனசாமியின் மற்ற வாரிசுகளுக்கு பாத்தியப்பட்ட இடம் என்று சொன்னால் சரியல்ல. 2 ம் தபசில் சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் என் பாட்டிக்கு பாத்தியப்பட்டது. 2 ம் தபசில் சொத்து எங்கள் பெயரில் உள்ளதா என்றால் இல்லை. 5.5 அடி சொத்தினை எந்த ஆவணமும் இல்லாமல் அனுபவம் செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. 2 ம் தபசில் சொத்தினை பொறுத்து நாங்கள் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.02.13 19:55:25 +0530

5.வழக்கில் நாங்கள் தாக்கல் செய்துள்ள மின்இணைப்பு ரசீது, வீட்டு தீர்வை ஆகியவைகள் 1ம் தபசில் சொத்திற்குரியது என்றால் சரிதான். நாங்கள் 2ம் தபசில் சொத்தை அபரிக்க வேண்டும் என்று 1ம் தபசில் சொத்திற்கான ஆவணங்களை பொய்யாக தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. 2ம் தபசில் சொத்து சங்கரநாடார் என்ற ரத்திரனசாமியின் அனைத்து வாரிசுகளுக்கும் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அதனால் என் அம்மாவுக்கு ஒரு பாகம் மட்டும் தான் என்றால் சரிதான். அதனால் என் பாட்டி எங்களுக்கு எழுதிக்கொடுத்த ஆவணம் செல்லாது என்றால் சரியல்ல.

6.நாங்கள் 1ம் தபசில் சொத்தினை பட்டா இல்லாமல் அனுபவம் செய்து வருகிறோம் என்றால் சரிதான். நாங்கள் 2ம் தபசில் சொத்திற்கு மட்டும் தான் பட்டாவிற்கு விண்ணப்பித்தோம் என்றால் சரியல்ல. 2ம் தபசில் சொத்து 1ம் தபசிலுடன் சேர்ந்து இருப்பதாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. கோவில்செல்வி யார் என்றால் பெரியம்மா ஆவார். 2ம் தபசில் சொத்து கோவில் செல்வி பெயரில் உள்ளதா என்றால் தெரியாது. 2ம்தபசில் சொத்தினை கோவில்செல்வி பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்துவிட கூடாது என்பதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி ரத்தினமாலா எனக்கு அத்தை ஆவார்.

7.பிரதிவாதி சங்கரநாடார் என்ற ரத்திரனசாமியின் பெண் மகளின் வாரிசு என்றால் சரியல்ல. பிரதிவாதி எங்கள் ஊரில் இல்லை என்றால் சரிதான். கோவில் செல்வி 2ம் தபசில் சொத்தினை பிரதிவாதிக்கும், அவரது

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2026.02.13 19:55:29 +0530

உடன்பிறந்தவர்களுக்கும் அனுபவம் செய்ய கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. கோவில்செல்வி ஊர் திருவிழாவிற்கு வரும்போது அனுபவம் செய்யவற்காக 2ம் தபசில் சொத்தினை பிரதிவாதிக்கும், அவரது உடன்பிறந்தவர்களுக்கும் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

8.2ம் தபசில் சொத்தில் என் தந்தையான வாதிக்கும், எங்களுக்கும் எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. நாங்கள் தான் அனுபவித்து வருகிறோம். எங்களுக்கு எந்த ஆவணமும் இல்லாததால் அனுபவத்தை தோற்றுவிக்க வேண்டும் என்பதற்காக ஆடு, மாடுகள் கட்டியும், பழைய பொருட்களை போட்டு வைத்துள்ளோம் என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கும், தாவா சொத்திற்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என்றால் சரிதான். அதனால் தான் தாவா சொத்தினை அபரிக்க வேண்டும் என்று நோக்கில் தாவா வழக்கினை போட்டுள்ளோம் என்றால் சரியல்ல.

9.என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படத்தில் உள்ள வீடுகளில் எது 1ம் தபசில் எது 2ம் தபசில் என்றால் ஊதா நிற பெயிண்ட் அடித்துள்ள இரும்பு கேட்டினை ஒட்டி உள்ள வீட்டிற்கு அடுத்த வீடு எங்கள் வீடு ஆகும். அது 1ம் தபசில் ஆகும். அதற்கு எதிர்தாற்போல் உள்ளது 2ம் தபசில் ஆகும்.(மேற்படி புகைப்படம் பி.சா.ஆ1 ஆகும்.) ஆழ்வார் திருநகரி காவல் நிலையத்தில் 14.04.2024ம் தேதி கொடுத்துள்ள புகார் சம்பந்தமாக எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2026.02.13 19:55:33 +0530

10.ரத்தினமாலா அத்துமீறி எங்கள் இடத்தில் நுழைந்ததாக மேற்படி புகாரில் சொல்லியுள்ளோம் என்றால் சரிதான். மேற்படி புகைப்படத்தில் காண்பிக்கப்படும் நபர் என் அண்ணன் அமல்ராஜ் ஆவார்.(மேற்படி புகைப்படம் பி.சா.ஆ 2 ஆகும்.) மேற்படி அமல்ராஜ் தான் ஆழ்வார் திருநகரி காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். ரத்தினமாலாவுக்கும், தாவா சொத்திற்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என்பதால் தாவா வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

HARIRAMAKRISHNAN
Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2026.02.13 19:45:37 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி ,
ஸ்ரீவைகுண்டம்.